7 பாடம்

# தெருக்களில் சுகம்

*ஜேக்ஸன், ஜெனிஃபர், அவர்களது மகன், மகள் யாவருக்கும் சுகமில்லாமல் போனது. மருத்துவரிடம் சென்றார்கள். மருத்துவர் அவர்களைப் பரிசோதித்து மருந்து, மாத்திரைகள் தந்தார். இப்போது ஜேக்ஸனும் ஜெனிஃபரும் அவர்களின் பிள்ளைகளும் நல்ல சுகம் பெற்றார்கள். சுகமில்லாதிருந்த அநேகரை இயேசுவின் நாமத்திலே, சீடர்கள் சுகமாக்கினர். எப்படி எனப் பார்ப்போமா?*

காலை முதல் இரவு வரையிலும் இயேசுவின் அப்போஸ்தலர்கள் இயேசுவைப்பற்றி ஓடி ஓடி தெருத் தெருவாக, வீடு வீடாகப் பிரசங்கித்தார்கள். இயேசுவின் நாமத்தில் அற்புத அடையாளங்களைச் செய்தார்கள்.

இயேசு இந்த உலகில் இருந்தபோது இயேசுவால்



தொடப்பட்டவர்களும், இயேசுவைத் தொட்டவர்களும் சுகம் பெற்றார்கள். இயேசுவின் காலத்தைப் போன்றே அப்போஸ்தலர் காலத்திலும் அற்புதங்கள் நடைபெற்றன.

இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்த நாட்களில், தம்முடைய பிள்ளைகள் தமக்குப் பின்னே செய்யவிருக்கும் ஊழியத்தைப்பற்றி இவ்வாறு கூறினார். 'என்னை விசுவாசிக்கிறவன் என்னிலும் பெரிதானவைகளைச் செய்வான்' என்று இயேசு கூறியிருந்தபடியே நடைபெற்றது. தேவ ஆவியால் நிரப்பப்பட்டிருந்த அப்போஸ்தலர்களை வெவ்வேறு வகையிலே தேவன் தமது ஊழியத்திற்காகப் பயன்படுத்தினார். சுகமில்லாதிருந்த மக்கள் சுகம் பெற்றார்கள்; துன்பத்திலிருந்த மக்கள் இன்பம் அடைந்தார்கள்.

தேவாலயத்திலுள்ள சாலொமோன் மண்டபத்தில் அடிக்கடி அப்போஸ்தலர்களும் புதியவிசுவாசிகளும் ஒன்று கூடினார்கள். இயேசுவைப்பற்றிய

## மனன வசனம்

**கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.**

**1கொரிந்தியர் 15:58.**

நற்செய்தியைப் பிறருக்குச் சொல்ல அப்போஸ்தலர் ஒருபோதும் சோர்ந்து போகவேயில்லை. மிகவும் உற்சாகமாக ஒரே மனதுடன்அடிக்கடி ஒன்றுகூடி ஜெபித்தனர்; ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் கர்த்தரிடத்தில் சேர்ந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் அற்புதமும் அதிசயமுமான செயல்கள் நடைபெற்றன. ஏனெனில், ஒவ்வொரு நாளும் தேவன் அங்கே அவர்களில் கிரியை செய்தார். அவர்களும் தேவனுக்குத் தங்கள் மனதில் இடம் தந்தனர்.

விசுவாசம் நிறைந்த நோயாளிகள் வீதிகளில் படுக்கவைக்கப்பட்டார்கள். ஏனெனில், பேதுரு அவ்வழியே தேவனுடைய நற்செய்தியை மக்களுக்குச் சொல்லிக் கொண்டு செல்வதுண்டு.

அவ்வாறு அந்த தேவ மனிதர் அங்குமிங்கும் பரபரப்ட ஊழியத்தின் நிமித்தம்செல்லும் போது அவரது நிழலாகிலும் தங்கள் நோயாளிகள் மீது படட்டும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எனவே பேதுருவின் நிழல்பட்டேனும் சுகம் கிடைக்கட்டும் என்ற விசுவா சத்துடன் நோயாளிகளை வீதிகளில் கிடத்தியிருந்தனர். நோயாளிகளும் மிகுந்த நம்பிக்கையுடன் அவர்கள் படுக்கைகளிலே வீதிகளில் படுத்திருந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் இருந்த ஊரிலும், கிராமங்களிலும் மட்டுமல்ல. பட்டணங்களிலுமிருந்தும் சுகம்பெற மக்கள் ஓடி வந்தார்கள்.



## செய்தி

**மற்றவர்கள் சுகமாகிட நான் உதவும்போது, தேவனுக்கு நான் சேவைசெய்கிறேன்.**

ஆவியானவரின் வல்லமையால் பேய்களும் மக்களைவிட்டுப் பயந்து, ஓட்டம்பிடித்தன. சுகம் பெற்றவர்கள் சும்மா இருக்க வில்லை. தேவன் தம் சீடர்களின் மூலமாகச் செய்த அதிசயங்களையும் அற்புதங் களையும் உறவினர்கள் நண்பர்களிடத்திலும் கூறினார்கள்.

தேவன் தங்களுக்குத் தந்த சுகத்தைச் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

பார்வையற்றோர் பார்வை பெற்றார்கள். நடக்கமுடியாதிருந்தவர்கள் நடந்தார்கள். பிசாசின் பிடியிலிருந்தோர் அதன் பிடியிலிருந்து விடுபட்டனர். சுகம் கேட்டு வந்த அனைவருமே சுகம் பெற்றுத் திரும்பினர் என்றுதான் வேதம் சொல்கிறது.

குட்டிப் பிள்ளையே! இயேசுவின் நற்செய்தி, இயேசு வின் அன்பு, இயேசுவின் தியாகத்தைச் சிந்திந்த மக்கள்சீர்ப்பட்டனர்.

நீ! எப்படி?

### செய்முறை:

*பாடத்தைப் படித்து, கேள்விகளுக்கு பதில் எழுதவும்.*

## புதிர் 7



1. யாருடைய வல்லமையால் பேய்களும் மக்களைவிட்டுப் பயந்து, ஓட்டம்பிடித்தன?

______________________________

2. இயேசுவின் காலத்தைப் போன்றே யார் காலத்திலும் அற்புதங்கள் நடைபெற்றன?

______________________________

3. யாருடைய நிழல்பட்டேனும் சுகம் கிடைக்கட்டும் என்ற விசுவாசத்துடன் நோயாளிகளை வீதிகளில் கிடத்தியிருந்தனர்?

______________________________